## 24. மெய்ப்பாட்டியல் 27 3

(உடம்பில் ஏற்படும் புறப்புலப்பாடுகள் பற்றிக் கூறும் பகுதி)

### மெய்ப்பாடுகளின் வகை

1195. பண்ணைத் தோன்றிய எண்நான்கு பொருளும்
கண்ணிய புறனே நால்நான்கு என்ப.

### அவற்றின் தொகை

1196. நால்இரண்டு ஆகும் பாலுமா ருண்டே.

### அவற்றின் பெயர்

1197. நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப.

### நகை

1198. எள்ளல் இளமை பேதைமை மடன் என்று
உள்ளப்பட்ட நகை நான்கு என்ப.

### அழுகை

1199. இளிவே இழவே அசைவே வறுமை என
விளிவில் கொள்கை அழுகை நான்கே.



அறிவு இன்பப் பயன் விளைக்கும் விளையாட்டு ஆயத்தின்கண் தோன்றிய 8 X 4 = ஆக 32 கருத்துக்களும் எண்வகைச் சுவைகளையும் (பொருள்) வெளிப்படுத்தும் விறல் அல்லது சுவை 4X4=16 ஆகும். 1

எண்வகைச் சுவைகளை வெளிப்படுத்தும் விறல் அல்லது சுவை எட்டுமாகும். 2

சிரிப்பு, அவலம், இழிபு, வியப்பு, பயம், பெருமிதம், சினம், மகிழ்ச்சி என மெய்யின் புறப்புலப்பாடுகள் எட்டு வகைப்படும். 3

இகழ்தல், இளமை, அறியாமை, அறிந்தும் அறியாதது போலிருத்தல் - இந்நான்காலும் சிரிப்பு ஏற்படும். 4

இழிவு, இழப்பு, தளர்ச்சி, வறுமை அழிவில்லாத கொள்கை நான்கால் அழுகை ஏற்படும். 5

### இளிவரல்

1200. மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு
யாப்புற வந்த இளிவரல் நான்கே.

### மருட்கை

1201. புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே.

### அச்சம்

1202. அணங்கே விலங்கே கள்வர் தம்இறை எனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே.

### பெருமிதம்

1203. கல்வி தறுகண் இசைமை கொடைஎனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே.

### வெகுளி

1204. உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ற
வெறுப்ப வந்த வெகுளி நான்கே.

### உவகை

1205. செல்வம் புலனே புணர்வு விளையாட்டு என்று
அல்லல் நீத்த உவகை நான்கே.



முதுமை, நோய், துன்பம், எளிமை இவற்றால் இளிவரலாகிய இழிபு ஏற்படும். 6

இதுவரைக் காணாததைக் கண்ட புதுமை, அளவின் மிக்க பெருமை, அளவின் மிகக் குறைந்த சிறுமை, ஒன்று பிறிதொன்றாகும் ஆக்கம், இவை நான்காலும் அறிவான் அமையாத வியப்பு ஏற்படும். 7

கட்புலனாகா தம் ஆற்றலால் வருத்தும் சூர் முதலான தெய்வங்கள்,கொடிய விலங்குகள், கள்வர், அரசன், மாறுபட்டு எதிர்த்தல் அமையாத அச்சம் மேற்கூறிய நான்காலும் ஏற்படும். 8

கல்வியால், அஞ்சாமையால், நன்னடையால் வரும்புகழால், வரையாது வழங்கும் வள்ளன்மையால் பெருமிதமாகிய வீறு தோன்றும். 9

உறுப்புக்களை அறுத்தலாலும், தம் கீழ் வாழும் குடிகளைத் துன்புறுத்தலாலும், வைதலும் அடித்தலாலும், அறிவாற்றல் புகழ் முதலானவற்றைக் கொன்றுரைப்பதாலும் வெறுக்கத்தக்க சினம் தோன்றும். 10

செல்வத்தால் ஏற்படும் நுகர்ச்சியாலும், புலமையால் ஏற்படும் அறிவு முதிர்ச்சியாலும், உள்ள இணைப்பாலும், உள்ளம் ஒத்தாரொடு கூடி ஆடும் விளையாட்டாலும், துன்பம் நீங்கிய மகிழ்ச்சி தோன்றும். 11

## மெய்ப்பாட்டிற்குரிய பிறநிலைக்களன்கள்

1206. ஆங்கு அவைஒரு பாலாக ஒருபால்
உடைமை இன்புறல் நடுவுநிலை அருளல்
தன்மை அடக்கம் வரைதல் அன்பு எனாஅக்
கைம்மிகல் நலிதல் சூழ்ச்சி வாழ்த்தல்
நாணுதல் துஞ்சல் அரற்றுக் கனவு எனாஅ
முனிதல் நினைதல் வெரூஉதல் மடிமை
கருதல் ஆராய்ச்சி விரைவு உயிர்ப்பு எனாஅக்
கையாறு இடுக்கண் பொச்சாப்புப் பொறாமை
வியர்த்தல் ஐயம் மிகைநடுக்கு எனாஅ
அவையும் உளவே அவை அலங்கடையே.

## அகன் ஐந்திணைக்குரிய மெய்ப்பாடுகள்

1207. புகுமுகம் புரிதல், பொறிநுதல் வியர்த்தல்
நகுநயம் மறைத்தல், சிதைவு பிறர்க்கு
இன்மையொடு
தகுமுறை நான்கே ஒன்றென மொழிப.

### இரண்டாம் பகுதி

1208. கூழை விரித்தல், காதொன்று களைதல்,
ஊழணி தைவரல், உடைபெயர்த்துடுத்தலொடு
கெழீஇய நான்கே இரண்டென மொழிப.



முற்கூறியவை முப்பத்திரண்டுபோக, இன்னொரு பக்கத்தில் முப்பத்திரண்டும் மெய்ப்பாட்டின் நிலைக் களன்களாக அமையும் 1. உடைமைகள் 2. அவற்றை எண்ணி மகிழல் 3. நடுவுநிலைமை 4. அருளொடு இருத்தல் 5. இயற்கைப் பண்பு 6. அடக்கம் 7. ஒழுக்கம் 8. அன்பு 9. அளவில் மிகுதல் 10. பிறரைத் துன்புறுத்தல் 11. ஆழ்ந்து எண்ணுதல் 12. வாழ்த்தல் 13. தீமைக்கு நாணுதல் 14. உறக்கம் 15. அரற்றுதல் 16. கனவு 17. வெறுத்தல் 18. நினைத்தல் 19. அஞ்சுதல் 20. சோர்ந்திருத்தல் 21. கருதுதல் 22. ஆராய்தல் 23. விரைதல் 24. நெடுமூச்சு 25. செயலற்றதன்மை 26. துன்பம் 27. மறதி 28. பொறாமை 29. மெய்ப்புழுக்கம் 30. ஐயம் 31. உள்ளமிகுதி 32. நடுங்குதல் - இவையும் அமையும். 12

புதிய நாட்டத்தை விரும்புதல், தலைவியின் நுதல் வியர்த்தல், விருப்பத்தால் ஏற்படும் முறுவலை மறைத்தல், தன் உள்ளச்சிதைவு பிறர்க்குப் புலப்படா வண்ணம் நிறுத்துதல், இந்நான்கும் களவில் தலைவிக்குரிய முதல்நிலை மெய்ப்பாடுகள். 13

கூந்தலைச் செம்மையாகக் கட்டுவதற்கு விரித்தல், தலைவி மெலிதலால் காதிலுள்ள தோடு விழுந்து விடுமோ என அஞ்சிக் களைதல், முறையாக அணியப் பெற்ற, வளையல், மோதிரம் போன்றவை களைத் தடவுதல், ஆடை நெகிழ்ந்தமையால் அவிழ்த்து உடுத்தல் என்ற நான்கும் இரண்டாம் நிலை மெய்ப்பாடுகள். 14

### மூன்றாம் பகுதி

1209. அல்குல் தைவரல், அணிந்தவை திருத்தல்
இல்வலி யுறுத்தல், இருகையும் எடுத்தலொடு
சொல்லிய நான்கே மூன்றுஎன மொழிப.

### நான்காம் பகுதி

1210. பாராட்டு எடுத்தல், மடம் தப உரைத்தல்
ஈரமில் கூற்றம் ஏற்று அலர் நாணல்,
கொடுப்பவை கோடல், உளப்படத் தொகைஇ
எடுத்த நான்கே நான்கென மொழிப.

### ஐந்தாம் பகுதி

1211. தெரிந்து உடம்படுதல், திளைப்பு வினைமறுத்தல்
கரந்திடத்து ஒழிதல், கண்டவழி உவத்தலொடு
பொருந்திய நான்கே ஐந்தென மொழிப.

### ஆறாம் பகுதி

1212. புறஞ்செயச் சிதைதல், புலம்பித் தோன்றல்
கலங்கி மொழிதல், கையறவு உரைத்தலொடு
புலம்பிய நான்கே ஆறென மொழிப.

### அகத்திணைக்கு இவை போல்வன நிமித்தமாதல்

1213. அன்ன பிறவும் அவற்றொடு சிவணி
மன்னிய வினைய நிமித்தம் என்ப.



ஆடை நெகிழ்ந்ததைத் திருத்தும்போது அடி வயிற்றுப் பகுதி ஆடையினைத் தடவிச் சரிசெய்தல், மேகலை, தொடையணி, சிலம்பு போன்றவற்றைத் திருத்துதல், இல்லாத வலிமையைக் காட்ட முயலல், நாணத்தால் இருகையையும் மேலெடுத்தல் என இவை நான்கும் மூன்றாம் நிலை மெய்ப்பாடுகள். 15

தலைவன் தலைவியைப் பாராட்டிப் பேசுதல், மடப்பம் நீங்கத் தலைவி சில உரைத்தல், பிறர் கூறும் இரக்கமற்ற சொற்களைக் கேட்டு அதனால் ஏற்பட்ட புறத்தார் பேசுவதற்குத் தலைவி நாணல், தலைவன் கொடுத்தவற்றை ஏற்றுக் கொள்ளல், இந்நான்கும் நான்காம் நிலை மெய்ப்பாடுகள். 16

தலைவி தலைவன் எண்ணங்களுக்கு உடம்படுதல், கூட்டத்திற்கு தவிர்த்து மறுத்தல், மறைந்து அவன் காணாநிலையில் இருத்தல், அவனைக் கண்டபோது மகிழ்தல், ஆகிய நான்கும் ஐந்தாம் நிலை மெய்ப்பாடுகளாம். 17

புறத்தில் ஒப்பனைகள் ஆயத்தார் செய்யும்போது உளம் சிதைதல், தனிமையில் தோன்றல், வரைவு நீட்டித்தலால் மனம் கலங்கிப் பேசுதல், தன் செயலற்ற தன்மையைப் பிறர்க்கு உரைத்தல், ஆகிய நான்கும் ஆறாம்நிலை மெய்ப்பாடுகள். 18

மேற்கூறிய 24 மெய்ப்பாட்டு நிலைகளும், அவைபோன்றன பிறவும் காமவொழுக்கத்திற்குரிய நிமித்தங்களாக அமையும் என்பர். 19

## நிமித்தமாகா இடம்

1214. வினையுயிர் மெலிவிடத்து இன்மையும் உரித்தே.

## கைக்கிளைக்குரிய மெய்ப்பாடு

1215. அவையும் உளவே அவையலங் கடையே.

## பெருந்திணைக்குரிய மெய்ப்பாடு

1216. இன்பத்தை வெறுத்தல், துன்பத்துப் புலம்பல்,
எதிர்பெய்து பரிதல், ஏதம் ஆய்தல்,
பசியட நிற்றல், பசலை பாய்தல்,
உண்டியிற் குறைதல், உடம்பு நனிசுருங்கல்,
கண்துயில் மறுத்தல், கனவொடு மயங்கல்,
பொய்யாக் கோடல், மெய்யே என்றல்,
ஐயம் செய்தல், அவன்தமர் உவத்தல்,
அறன் அழித்துரைத்தல், ஆங்கு நெஞ்சழிதல்,
எம்மெய்யாயினும் ஒப்புமை கோடல்,
ஒப்புவழி உவத்தல், உறுபெயர் கேட்டல்,
நலத்தக நாடின் கலக்கமும் அதுவே.

## மனன் அழியாத நிலையில் நிகழ்வன

1217. முட்டுவயின் கழறல், முனிவுமெய் நிறுத்தல்,
அச்சத்தின் அகறல், அவன்புணர்வு மறுத்தல்,
தூதுமுனிவு இன்மை, துஞ்சிச் சேர்தல்,
காதல் கைம்மிகல், கட்டுரை இனமை என்று
ஆயிரு நான்கே அழிவில் கூட்டம்.



உணர்வுகள் குறைந்த நிலையில் மேற்கூறிய மெய்ப்பாடுகள் இல்லாமலும் இருக்கலாம். 20

மேற்கூறிய புகுமுகம் புரிதல் முதலான 24 அகத்திணை மெய்ப்பாடுகளும் உளவே; எள்ளல் முதல் விளையாட்டு ஈறாக கூறப்பெற்றவை இல்லாத இடத்து. 21

1. தலைவியின் பிரிவு காரணமாக இன்பத்திற்குரிய பொருள்களை வெறுத்தல் 2. துன்பக்காலத்துப் புலம்புதல் 3. உருவெளிப்பாடு கண்டு இரங்குதல் 4. இடையூறுகளை ஆராய்தல் 5. பசி ஏற்பட்டும் உண்ணாதிருத்தல் 6. மேனி பசலை பாய்தல் 7. குறைத்து உண்ணுதல் 8. மேனி மெலிவுறுதல் 9. கண் துஞ்சாதிருத்தல் 10. கனவால் கலங்குதல் 11. தலைவன் அன்பைப் பொய்யாக் கருதுதல் 12. மெய்யே என்றல் 13. ஐயுறல் 14. அவனைச் சார்ந்தார் பேசுவதைக் கேட்டு மகிழ்தல் 15. அறனில்லை எனப் பேசுதல் 16. மனம் அழிதல் 17. ஒப்புமை கோடல் 18. ஒத்தவழி உவத்தல் 19. தலைவன் பெயரை விரும்பிக் கேட்டல் 20. மனக்கலக்கத்தால் பேசுதல் என இருபதும் அமையும். 22

1. இடையூறு நேர்ந்துழிப் பேசல் 2. வெகுளியைக் காட்டல் 3. அச்சம் காரணமாக அகலுதல் 4. அவன் சேர்க்கையை மறுத்தல் 5. தூது உரைத்தலை விரும்புதல் 6. உளம் மடிந்து மனை சேர்ந்திருத்தல் 7. நெஞ்சு உளைதல் 8. பேசாதிருத்தல் - இவை எட்டும் அழிவில் கூட்டம். 23

## இதுவும் அது

1218. தெய்வம் அஞ்சல், புரை அறம் தெளிதல்,
இல்லது காய்தல், உள்ளது உவத்தல்,
புணர்ந்துழி உண்மை, பொழுது மறுப்பாக்கம்,
அருள்மிக உடைமை, அன்புதொக நிற்றல்,
பிரிவாற்றாமை, மறைந்தவை உரைத்த
புறஞ்சொல் மாணாக் கிளவியொடு தொகைஇ
சிறந்த பத்தும் செப்பிய பொருளே.

## மெய்ப்பாட்டுக்குரிய ஒப்புமை

1219. பிறப்பே, குடிமை, ஆண்மை, ஆண்டோடு,
உருவு, நிறுத்த காம வாயில்,
நிறையே, அருளே, உணர்வொடு, திருஎன
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே.

## வேண்டாதன

1220. நிம்பிரி, கொடுமை, வியப்பொடு, புறமொழி,
வன்சொல், பொச்சாப்பு, மடிமையொடு, குடிமை
இன்புறல், ஏழைமை மறப்போடு, ஒப்புமை
என்றிவை இன்மை என்மனார் புலவர்.

## மெய்ப்பாடுகளின் நுட்பம்

1221. கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே.



1. தெய்வம் அஞ்சுதல் 2. உயர்ந்த அறத்தைத் தெளிதல் 3. இல்லாததற்குச் சினத்தல் 4. பெற்றதற்கு மகிழ்தல் 5. புணர்ந்த காலத்து மகிழ்தல் 6. இரவு பகல் பொழுதுகளை மறுத்தல் 7. அவனிடம் அருள்மிக உடைமை 8. அன்பை மறைத்து நிற்றல் 9. அவன் பிரிவை ஆற்றாமை 10. நிகழ்ந்தவை பற்றி உரைத்த புறஞ்சொல்லை ஏற்றுக் கொள்ளாத நிலை - ஆகிய பத்தும் கூறப்பெற்ற பொருள்கள். 24

1. குலப்பிறப்பு 2. ஒழுக்கம் - பண்பாடு 3. ஆள் வினையுடைமை 4. வயது 5. வடிவம் - வனப்பு 6. காமஒழுக்கத்திற்குரிய உள்ளக் கிளர்ச்சி 7. சால்பு 8. அருளுடைமை 9. உள்ளக் குறிப்பை அறிந்தொழுகும் நுண்ணறிவு 10. தெய்வப்பொலிவு என்ற பத்தும் ஒத்தவையாக இருத்தல் நல்லது. 25

1. நேயமின்மை 2. இரக்கமின்மை 3. புகழ்தல் 4. புறத்தார்க்குப் புலனாகாமை 5. கடுஞ்சொற்கள் 6. மறவி 7. சோம்பியிருத்தல் 8. குடிமைச் சிறப்பை உயர்வாக எண்ணி இன்புறல் 9. பணிவுடைமையை மறத்தல் 10. ஒப்பிட்டு நோக்கல் ஆகிய பத்தும் இல்லாமை நல்லது எனக் கூறுவர் அறிவுடையோர். 26

கண்ணாலும், செவியாலும் தெளிவாக அறிந்து உணரும் அறிவுடையார்க்கு அன்றி, ஆராயுமிடத்து, நல்நயம் சான்ற மெய்ப்பாட்டின் பொருள்களை எண்ணி அறிந்து கொள்ளுதல் அரிதாகும். 27

## இதுவும் அது

1218. தெய்வம் அஞ்சல், புரை அறம் தெளிதல்,
இல்லது காய்தல், உள்ளது உவத்தல்,
புணர்ந்துழி உண்மை, பொழுது மறுப்பாக்கம்,
அருள்மிக உடைமை, அன்புதொக நிற்றல்,
பிரிவாற்றாமை, மறைந்தவை உரைத்த
புறஞ்சொல் மாணாக் கிளவியொடு தொகைஇ
சிறந்த பத்தும் செப்பிய பொருளே.

## மெய்ப்பாட்டுக்குரிய ஒப்புமை

1219. பிறப்பே, குடிமை, ஆண்மை, ஆண்டோடு,
உருவு, நிறுத்த காம வாயில்,
நிறையே, அருளே, உணர்வொடு, திருஎன
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே.

## வேண்டாதன

1220. நிம்பிரி, கொடுமை, வியப்பொடு, புறமொழி,
வன்சொல், பொச்சாப்பு, மடிமையொடு, குடிமை
இன்புறல், ஏழைமை மறப்போடு, ஒப்புமை
என்றிவை இன்மை என்மனார் புலவர்.

## மெய்ப்பாடுகளின் நுட்பம்

1221. கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே.



1. தெய்வம் அஞ்சுதல் 2. உயர்ந்த அறத்தைத் தெளிதல் 3. இல்லாததற்குச் சினத்தல் 4. பெற்றதற்கு மகிழ்தல் 5. புணர்ந்த காலத்து மகிழ்தல் 6. இரவு பகல் பொழுதுகளை மறுத்தல் 7. அவனிடம் அருள்மிக உடைமை 8. அன்பை மறைத்து நிற்றல் 9. அவன் பிரிவை ஆற்றாமை 10. நிகழ்ந்தவை பற்றி உரைத்த புறஞ்சொல்லை ஏற்றுக் கொள்ளாத நிலை - ஆகிய பத்தும் கூறப்பெற்ற பொருள்கள். 24

1. குலப்பிறப்பு 2. ஒழுக்கம் - பண்பாடு 3. ஆள் வினையுடைமை 4. வயது 5. வடிவம் - வனப்பு 6. காமஒழுக்கத்திற்குரிய உள்ளக் கிளர்ச்சி 7. சால்பு 8. அருளுடைமை 9. உள்ளக் குறிப்பை அறிந்தொழுகும் நுண்ணறிவு 10. தெய்வப்பொலிவு என்ற பத்தும் ஒத்தவையாக இருத்தல் நல்லது. 25

1. நேயமின்மை 2. இரக்கமின்மை 3. புகழ்தல் 4. புறத்தார்க்குப் புலனாகாமை 5. கடுஞ்சொற்கள் 6. மறவி 7. சோம்பியிருத்தல் 8. குடிமைச் சிறப்பை உயர்வாக எண்ணி இன்புறல் 9. பணிவுடைமையை மறத்தல் 10. ஒப்பிட்டு நோக்கல் ஆகிய பத்தும் இல்லாமை நல்லது எனக் கூறுவர் அறிவுடையோர். 26

கண்ணாலும், செவியாலும் தெளிவாக அறிந்து உணரும் அறிவுடையார்க்கு அன்றி, ஆராயுமிடத்து, நல்நயம் சான்ற மெய்ப்பாட்டின் பொருள்களை எண்ணி அறிந்து கொள்ளுதல் அரிதாகும். 27